ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

सतीमपि ज्ञातिकुलैकसंश्रयां जनोऽन्यथा भर्तृमतीं विशंकते।
अतः समीपे परिणेतुरिष्यते प्रिया प्रियावा प्रमदा स्वबन्धुभिः ॥

தன் பர்த்தா ஜீவிததிருக்குங்காலத்தில் ஒரு ஸ்திரீ அவனைவிட்டு ஞாதிகளுடைய குலத்திலேயே வசிப்பாளாகில் அவள் தன் கற்பை நன்றாய் இரக்ஷித்துக்கொண்டிருந்தாலும் உலகிலுள்ளோர் வேறு விதமாக நினைப்பார்களெனக்கருதி, பந்துஜனங்கள், அவள்பதிக்கு பிரியையாயிருந்தாலும் அல்லது பிரியமில்லாதவளாயிருந்தாலும் அதைக் கவனிக்காமல் புருஷன் ஸமீபத்திலேயே இருக்கும்படி செய்கிறார்கள்.

சிலர் பெண்களிடத்தில் அதிக அபிமானங்கொண்டு கணவன் வீட்டிலிருக்கவேண்டிய ஸமயத்திலும் அம்மங்கையை இரக்ஷிக்கக்கூடிய சக்தி தமக்கிருக்கிறதென்று புருஷன் கொஞ்சம் எழ்மைத்தனத்திலிருந்தால் அவன் வந்து அழைத்தாலும் விடாமல் தம் வீட்டிலேயே வைத்துக்கொள்ளுகிறார்கள். அது சரியல்ல. நமக்குப் பெண்குழந்தையாக எப்பொழுது ஏற்பட்டதோ அப்பொழுதே अर्थोहिकन्या परकीय एव ॥ என்று காளிதாஸருரைத்தபடி பிறருடையதே! அதை ஒரு பதியினிடம் விவாஹம் செய்துகொடுத்து அதற்கு யௌவனப்பருவமும் வந்துவிட்டால் அக்காலத்தில் எவ்வித சிரமம் நேர்ந்தாலும் பர்த்தாவின் அருகிலிருப்பது தான் உசிதம். ஆகையால்தான் மனுவும், भर्ता रक्षति यौवने ॥ யௌவனம் வந்தவுடன் ஸ்திரீகளை பர்த்தா ரக்ஷிக்கிறான் என்கிறார். இவ்விதமன்னியில் அக்காலத்தில் அந்த நாரியானவள் அவசியமாயிருக்கவேண்டிய சிற்சில காலங்களைத் தவிர மற்ற காலங்களில் பதியைவிட்டு வேறு எவரிடத்திலிருந்தாலும் எவ்வித நன்னடக்கையுடனிருந்தாலும் உலகத்தார் அபவாதமே கூறுவார்கள். ஆகையால் புருஷனுக்கு பிரியையாயினும், அப்பிரியையாயினும் யௌவனகாலத்தில் அவனருகில் வசிப்பது தான் சாஸ்திரங்களுக்கும் உலகத்தாருக்கும் திருப்தியாகுமாதலால் அவ்விதமிருப்பது மேன்மை,

ஆர்யதர்மம்.

ருதிரோத்காரி-௵ ஆனி-௴ ௨௮௳

யஜுர்வேத உபாகர்மானுஷ்டானத்தில் நிகழும் சங்கை.

இவ்வருஷம் வரும் யஜுர்வேத உபாகர்மத்தில் அடியில் வருமாறு சிலர் சங்கிக்கிறார்கள். அஃதாவது சொல்பகாலத்திற்கு முன் பஞ்சாங்கங்களின் உட்பிரிவுகள் அதிகமாய் ஏற்படாமலும் அனுஷ்டானத்திலிருந்தவைகளும் ஏதாவதோர் விஷயத்தில் அபிப்பிராயபேதத்தைக்கூறினாலும் பொதுவாய் நடைபெறும்பெரியகாரியங்களுக்கு ஏகாபிப்பிராயத்துடன் சரியான சமயத்தைக்காட்டி அவ்வண்ணமே பலரும் யாதொரு விவாதமுமின்றி ஒருங்கு சேர்ந்து நடத்திவந்தார்களென்பது வெளிப்படையே. தற்காலத்திலோ எண்ணிறந்த பஞ்சாங்கங்களேற்பட்டு ஒரே குடும்பத்திலுதித்த இரண்டு ஸகோதரர்கள் தம்பிதாவை யுத்தேசித்துச் செய்யும் சிராத்தத்தை பஞ்சாங்கபேதத்தால் ஒருவர் முதல் தினத்திலும் மற்றொருவர் மறுதினத்திலும் செய்கிறார்கள். இவ்விருவருள் யாராவதொருவர் அனுஷ்டித்தது சரியாகுமே யல்லாது இரண்டும் சரியென்பது பொருந்தாது. இவ்விதம் தாங்கள் அனுஷ்டிக்கும் பஞ்சாங்கங்களிற்கூறியிருப்பதே வேதவாக்கென்று நினைத்து உண்மையை உற்றுநோக்காமல் கர்மாக்களை அனுஷ்டித்து ஏராளமான பொருள் நஷ்டத்தையும் அனாவசியமாய் வெகு ஜனங்கள் அனுபவித்து வருகிறார்களென்பதும் யாவருமறிந்த விஷயம்.

இவ்வருஷத்தில் வரும் யஜுர்வேத உபாகர்ம விஷயமாய் திருக்கணிதப் பஞ்சாங்கப்படி அனுஷ்டிப்பவர்கள் வரும் ஆடி

ஸ்ரீத்திய பௌர்ணமி திதியில் பிரதம உபாகர்மமும் மற்றுமுள்ளவர்களின் உபாகர்மமும் நடத்தவேண்டுமென்றும் சிராவண பௌர்ணமி என்று உபாகர்மானுஷ்டானத்திற்கு முக்கிய காலமாகக்கூறப்படும் ஆவணிஸ்ரீ பௌர்ணமியானது சாகாதிபனான சுக்கிரனுக்கு அஸ்தமன காலமாகையால் அதுதோஷமுள்ளதென்றும் அந்த ஸமயத்தில் உபாகர்மம் செய்யக்கூடாதென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். வேறு பஞ்சாங்கப்படி அனுஷ்டிப்போர்கள் வரும் ஆடி ஸ்ரீத்து பௌர்ணமியில் பிரதமோபாகர்மம் மாத்திரம் அனுஷ்டிக்கவேண்டுமென்றும் மைத்த உபாகர்மங்கள் யாவும் சாகாதீசனான சுக்கிராஸ்தமனத்தால் தோஷமுள்ளதாயிருப்பினும் முக்கிய காலமாகக்கூறப்பட்ட ஆவணி-ஸ்ரீ பௌர்ணமியிலேயே அனுஷ்டிக்கவேண்டுமென்றும் கருதுகிறார்கள். பஞ்சாங்கங்களிற் கூறியுள்ள விஷயங்களில் நம்மால் சுலபமாயறிந்துகொள்ளமுடியாத திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் முதலியவைகளை மாத்திரம் அவ்விதமே அங்கீகரித்து அந்த ஸமயங்களில் அனுஷ்டிக்கும்படி சொல்லப்பட்ட உபாகர்மம் சிராத்தம் முதலியவைகளில் சந்தேகம் ஏற்பட்டால் இவைகளின் தீர்மானத்தின் பொருட்டே ஏற்பட்ட தர்மசாஸ்திரங்களை நேரிலோ பண்டிதர்களைக்கொண்டோ நன்குபார்த்து அவைகளால் தீர்மானமாகும் தினத்தையே முக்கியமாயெடுத்துக்கொள்ளவேண்டுமேயல்லாமல் இதற்கு விரோதமாய் பஞ்சாங்கத்தில் கூறப்பட்டிருப்பின் அதை விலக்கத்தான் வேண்டும். ஸமீபத்திலனுஷ்டிக்கவேண்டியதாயும் விவாதத்திலிருப்பதுமான யஜுர்வேத உபாகர்மமென்கிற இவ்விஷயத்தைக்கற்றறிந்த கல்விமான்கள் பெரியோர் இவ்விதம் சொல்லியிருக்கிறார்களென்று காலஞ்சென்ற மஹான்களையும் ஆசாரபிர்மால்பிரத்தையும் மாத்திரம் சாஸ்திரார்த்தங்களுக்கு விரோதமாய் எடுத்துக்காட்டாமல் நம் பஞ்சாங்கமென்கிற அபிமானத்தை அறவேயொழித்து மூலஸ்மிருதிவசனார்த்தங்களை நன்குகவனித்துப் பார்த்து அதின் உண்மையான தீர்மானத்தை முக்கியமாய்க் கொண்டு அதற்கு ஒற்றுமையுள்ள அனுஷ்டானத்தையும் பெரி

இத்தகைய சங்கங்களால் உண்டாகும் பயன்.

இச்சங்கங்களால் உண்டாகும் நன்மைகள் பல' அவற்றிற் சில சொல்லாமலே எவர்க்கும் இனிது விளங்கும். இதுவரையிற் சில்லறைக்கடைக்காரர்களிடம் புத்தகம்முதலியவற்றை வாங்கி வந்த பிள்ளைகள் இச்சங்கத்திற் சேர்ந்து இதன் வழியாகவே வாங்கிவருவதால் அந்தச் சில்லறைக் கடைக்காரர்கள் லாபம் என்று அடையும் தொகையைத் தங்களுடையதாக்கிக் கொள்ளுகிறார்கள். வருஷம் ஒன்றுக்குச் சுமார் இருபது ரூபாய்க்குக் குறையாமல் புத்தகம் முதலிய வாங்கக்கூடிய மூவாயிரம்பிள்ளைகள் படித்துவரும் கும்பகோணம் போன்ற பட்டணங்களில் பத்து வருஷங்களில் அந்தச் சில்லறைக் கடைக்காரர்களுக்கு லாபமும், இந்தச் சங்கங்களுக்கு மிகுதியும் என்று கருதக் கூடிய அத்தொகை எவ்வளவுபெரியதாகும்! சற்றேறக்குறைய எழுபத்தையாயிரம் ரூபாய்களாகின்றனவே! வட்டி முதலிய ஏதும் இன்றியே இவ்வளவு பெருந்தொகை சேருமானால் அதன் பெருக்கத்தை என்னென்று கூறுவது! இத்தகைய பெருந்தொகையினைக் கொண்டு தொழில் நடத்துபவர் அல்லவா முதலாளிகளெனப்படுகின்றனர்? இப்பொழுது நமது மாணவர்கள் முதலாளிகளாகவில்லையா? இந்தப் பெருந்தொகை மாணவர்களிடத்தில் அவர்கள் அனைவருக்கும் பொதுவானதாக இருக்குமாயின், அதனால் பொதுவாக உபயோகப்படக்கூடிய கற்கும் இடம், பேசும்இடம், சாப்பாட்டிடம், விளையாட்டிடம்போன்ற பல நல்ல காரியங்களுக்கு எவ்வளவு உதவியாயிருக்கும்? இங்ஙனம் பெருந்தொகை சேர்வதற்கு, அவர்கள் தங்களுக்கு வேண்டியபுத்தகம் முதலியவற்றைக் கடையிலேக்குத் தங்களது சங்கத்திலேயே வாங்கிவருவதைத் தவிர வேறு எந்தச்சிறுதொகையையும் கொடுத்து உதவவேண்டியதில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. இந்தச் சங்கங்களை நடத்துவதால் மாணவர்கள் வியாபாரத்துறையிலும், வர்த்தகமுறைமையிலும் நல்ல அனுபவத்தைப் பெற்றவர்களாகின்றார்கள். அந்தப் பழக்கத்தால் அவர்கள் கணக்குப்பதிவு, கொடுக்கல்வாங்கல் முதலிய அவசியமான கல்விகளைக் கற்பதிலும் பிரியமுடையவர்களாகின்றார்கள்.

அன்றியும், அவர்கள் படிக்குங்காலத்திலேயே தங்களது பிற்கால வாழ்க்கைக்குத் துணைசெய்யக் கூடிய தொழில் முறையையும் இலகுவிற் கற்றுக்கொண்டவர்களாகின்றார்கள். இவற்றால் படிப்பை விட்டதும் "எங்ஙனம் பிழைப்போம்"? என்று ஏங்கி நிற்காமலும், துரைத்தனம் முதலிய துறைகளில் உத்தியோகம் கிடைக்காவிட்டாலும் "ஒரு தொழிலைச் செய்து சுகஜீவனம் பண்ணலாம்" என்ற தைரியத்துடனும் உற்சாகத்துடனும் இருத்தற்கும் அவர்களுக்கு இடமுண்டாகிறது. இச்சங்கங்கள் சற்று விரிவானதும் அவைகள் தங்களது நிர்வாகத்துக்குவேண்டிய உத்தியோகஸ்தர்களையும், வேலைசெய்வதற்கு வேண்டிய சேவகர்களையும் புத்தகம் முதலியவற்றை அச்சியற்றவும் பைண்டு செய்யவும் கூடிய பல தொழிலாளர்களையும் சம்பளம் கொடுத்து வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமையை அடைகின்றன. அக்கால் அவற்றின் அங்கத்தினர்களில் தகுதியுள்ளவர்களுக்கே அவை கொடுத்துதவப்படும். அவ்வகையில் இச்சங்கங்களின் அங்கத்தினர்கள் தாமே முதலாளியாகவும் தாமே தொழிலாளியாகவும் இருக்க இடம் உண்டாகின்றது. இங்கு "வேலை கிடைக்காமையால் பிழைக்க வழியற்றிருக்கின்றோம்" என்று சொல்பவர்களுக்கு இந்த இயக்கம் தக்கதொரு வழியையும் காட்டுகின்றது என்பது ஊன்றியறியத்தக்கது. இந்த இயக்கத்தின் முன்னேற்றத்தில் விருப்பங்கொண்டவர்கள் ஜனப்பொறுப்பாட்சியாகிய சுயஆட்சியே மேலானது என்ற நம்பிக்கையினையுடையவர்களாவார்கள். நமது நாட்டிலே அத்தகைய உயரிய ஆட்சியை விரும்புகின்றவர்களில்லையா? மேல்நாடுகளில் அமெரிக்கா, ஜர்மனி முதலிய நாடுகளல்லையா? இங்கிலாந்தும் அத்தகைய ஆட்சியினைக் கைக்கொண்டொழுகும் நாடுதானே? இவற்றால் "ஆளப்படுவோர் கருத்தின்படியே ஆள்வோர் ஆட்சி செலுத்தல் வேண்டும்" என்பது புலப்படவில்லையா? இதனால்தான் கூட்டுறவாளிகளும் ஜனப்பொறுப்பாட்சியில் நம்பிக்கை வைத்துள்ளார்கள்; தங்களது இயக்கத்தையும் அத்துறையிலேயே நடத்திவருகிறார்கள் இதில் ஏதும் தவறில்லை என்பது முறகூறியவற்றால் இனிது விளங்கும்.

நிற்க, "ஆளப்படுவோர் கருத்தின்படியே ஆட்சி நடைபெறவேண்டும்" என்று கருதப்படும் இக்காலத்தில், தினவாழ்க்கைக்கு உபயோகப்படும் உணவு, உடை முதலியவற்றிற்கானபொருளை விலைகொடுத்து வாங்குவோர் கருத்தின்படி விற்போர் நடந்துகொள்ளவேண்டாமா? அஃதாவது வாங்குவோர், விற்போர்மீது ஆட்சிசெலுத்த அதிகாரமுள்ளவராயிருத்தல் வேண்டாமா? தற்காலம நமது நாட்டில் அங்ஙனம்நடைபெறுகின்றதா? இல்லையே. மாறுபாடாகவன்றோ நடைபெறுகின்றது.? மேல் நாடுகளிலே கூட்டுறவுச் சங்கங்கள் பத்தாயிரக்கணக்கிலே தோன்றி வியாபாரசுய ஆட்சி பெரிதும் பரவிவருகின்றது என்பதும்; அதனால், அந்நாடுகளிலே தரித்திரம் வேலையில்லாத்தொல்லை, பொருள் காரணமாகவரும் உயர்வு தாழ்வு முதலியதீமைகள் நீங்கிவருகின்றன என்பதும் கேட்கப்படுகின்றனவே? ஏன் நமது நாட்டில் அத்தகைய உயரிய நிலைமை தோன்றலாகாது? நம்பிக்கையுடன் உறுதியாக ஊக்கங்கொண்டு முயன்றால் தோன்றவே செய்யும். அதற்கு இத்தகைய மாணவர்கூட்டுறவுச்சங்கங்களே முதலில் அடிப்படையாக நின்று துணை செய்யக்கூடியன. நமது நாட்டிலும் துரைத்தனத்தாராலும் பொதுஜனங்களாலும பலகூட்டுறவுச் சங்கங்கள் தோன்றியுள்ளன. ஆனால், அவைகூட்டுறவு முறையின் நோக்கத்தையும், தத்துவத்தையும், அதைக் கைக்கொள்ள வேண்டிய வழியையும் அறியாதவர்களது நிர்வாகத்தால் தற்காலம் உயிரற்ற நிலைமையில் இருக்கின்றன. கிராமங்களிலே பலர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாயும், பகுத்தறிவு இல்லாதவர்களாயும் இருக்கின்றனர். ஆதலின், இம்முறையை இனிது பரப்புவதற்குப் பெரிதும் துணை செய்யக்கூடியவர்கள் இப்பொழுது கல்வி கற்கும் மாணவர்களே. அவர்களுக்கு வேண்டிய புத்தகம் முதலிய கற்றற்குரிய கருவிகள் ஒரே மாதிரியாக இருக்கின்றன. இஃது ஒருவகையில் மொத்தமாக வாங்குவதற்குச் சாதகமாவதுடன் விசேஷ நன்மையினையும் தரக்கூடியது. (இன்னும் வரும்.)

ஊ. சா. வேங்கடராமய்யர்.

மதுரையில் நடைபெற்ற

மஹா கும்பாபிஷேகம்.

இம்மகா கும்பாபிஷேகம் இம்மதுரைமாநகரில் நடத்தவேண்டுமென்ற அவாவானது இப்பொழுதே தோன்றி உடனே நிறைவுபெற்றதென்று சிலர் நினைக்கக்கூடுமாயினும் இம்மாதிரி எண்ணுவது சரியல்ல. இவ்வெண்ணம் சுமார் 10வருடங்களாகவே ஏற்பட்டிருந்தது. இதற்கு முக்கியமான காரணம் ஸ்ரீ மீனாக்ஷியின் பிம்பத்தில் மருந்துக் குறைவுதான். அபிஷேக தீர்த்தம் பாதத்தினடியில் விசம்படி நீருக்குமேல் தங்கும்படி நேர்ந்திருந்ததென்பது பிரஸித்தம். இத்தகைய குழியால் எச்சமயம் அம்மனுக்குச் சலனம் ஏற்பட்டு விடுமோவென்று நடுக்கமுற்று இதற்குமுன் இக்கோயிலில் மானேஜர் உத்தியோகம் வகித்திருந்த P. S. அனந்தநாராயண அய்யரவர்கள் கும்பாபிஷேகம் நடத்தி விடவேண்டுமென்று பெறும் பாடுபட்டும் நிறைவேறாமல் போயிற்று. பிறகு இக்காலத்தில் ரிஸீவராயிருந்து வரும் செட்டியாரவர்களின் முயற்சிக்குத்தான் மீனாம்பிகை பலனளித்தாள். இவ்வைபவம் ஆனி-௴ 17௳ பானுவாரத்தன்று நடந்துமுடிந்தது. இவ்வைபவத்தை நடத்தவேண்டுமென்று சென்ற சித்திரை மாதத்தில் கோயில் கல்யாணமண்டபத்தில் ஆலோசனை செய்யவென்று ஓர் பெருங்கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்தில் ஆரம்பத்தில் பிராம்மணரல்லாதார் கூட்டத்தலைவரொருவர்எழுந்திருந்து இக்கும்பாபிஷேகம்நடைபெற வேண்டிய அவசியமில்லையென்றும் அப்படி நடப்பதாயிருந்தாலும்முதலில் நமது தீண்டாச்சகோதரர்கள் யாவரும் இக்கோவிலில் பிரவேசிக்கவேண்டியதவசியமென்றும் இன்னும் பலவாராகவெல்லாம் கர்ஜித்தனர். அவர் சொன்ன ஒவ்வொன்றுக்கும் ஸமாதானமாய் பதிலளித்தனர். அவர் மீண்டும் கூறவகையின்றி மௌனத்தவம் பூண்டனர். பிறகு ஆனி௴ 10௳ கும்பாபிஷேகமென்று ஜோதிஷர்களால் ஏகமனதுடன்ஏற்றுக்கொள்ளப்பட்

டது. பிறகு தேவஸ்தானப்பணத்திலிருந்து ஒருபைசாவேனும் இதற் கெடுக்கக்கூடா தென்று கோர்ட்டார் உத்திரவிட்டபடி யால் அதை அனுஸரித்து ஆங்காங்கு இருந்து பணவசூல் செய் யவென்று ஒவ்வொரு ஜாதியிலும் செல்வாக்குள்ள பெரியோர் தேர்ந்தெடுக்கப்பெற்ற பின்னர் ஏராளமானஜனங்கள்சூழ பத்தி ரிகையை புஷ்பம் பழங்கள் நிறைந்த வெள்ளிக்கமலத்திலமைத் து யானை, வாத்தியம் முதலிய கோவில் எடுபிடிகளுடன் சித் திரைவீதி வலம்வந்து அம்பாளின்பாதகமலத்தில் சாத்தி அர்ச் சனை நைவேத்தியம் ஸமர்ப்பித்துப் பிரஸாதம் பெற்றுத் தங் களிருப்பிடமேகினர்.

பிறகு அதுமுதற்கொண்டு இதுவிஷயமாய் மெம்பர்கள் அடிக்கடி கூடுவதும் பிரிவதுமாய் இருக்கையில் இதுவிஷய மாய் நகரவட்டகைபோய்த் தன்னினத்தாரோடு கலந்து வரு வதாய் ரிஸீவர் அழகப்பசெட்டியார் சென்று அங்கு அவர்க ளது கூட்டத்திற்கலந்ததில் அந்நகரத்தார் யாவரும் ஒருமன துடன் இக்கும்பாபிஷேகத்திற்குச் செல்லும் திரவியம் யாவும் நம்மால்தான் கொடுபடவேண்டு மென்று தீர்மானித்தனர். அதன்படியே நகரத்துச் செட்டிமார்களில் ஒவ்வொருவர் தனி த்தனியே கோவிலில் ஒவ்வொரு கைங்கரியத்தைத் தன் தன் சொந்தச் செலவிலேற்றுக் கொண்டு அந்தந்தக்கார்யத்தை வேகமாய்ச் செய்யக்கட்டளையிட்டனர். இதனிடையே நமது பிராமணரல்லாதார் கூட்டத்தின் விஷயங்கள் பலதுண்டுப்பிர சுரங்கள் மூலம் பொங்கித்ததும்பிக்கொண்டிருந்தன. ஆனால வை கவனிக்கத்தக்கவையல்லவென்று பொருட்படுத்தாமலி ருந்து கார்யம் நிறைவேறிக்கொண்டிருந்தது. ஆயினும் ஆனி 10ல் முகூர்த்தம் சரியாய் இல்லையென்று அனேகர் அபிப்பிரா யப்பட்டதை உத்தேசித்தும் கோவிலில் முக்கியமாய் ஆகவே ண்டிய வேலைத்தாமதத்தை உத்தேசித்தும் 17ம் தேதியும் நல் லமுகூர்த்த தினமாய் இருந்தது பற்றியும் முதல் முகூர்த்தத் தை மாற்றி 17ல் வைத்தார்கள். இம்முகூர்த்தம் தான் சரிவர நடைபெறவேண்டுமே என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்

போது தேசஸஞ்சாரம் செய்துவரும் வி. ஆர். தாஸ் என்பவர் இவ்வூரில் வந்து உபன்யாஸம் செய்ததில் கோவில் பொதுஸ்தலமென்றும் யாவரும் உள்சென்று தரிசிக்கலாமென்றும் கும்பாபிஷேக ஸமயத்தில் நாடார் ஸகோதரர்களும் மற்றும் பறையர் சக்கிலிய ஸகோதரர்களும் கூடி உடசெல்லலாமென்றும் அச்சமயம் எனது உதவி வேண்டுமென்றால் தந்திகொடுத்தால் வருகிறேனென்றும் சொன்னதாய் வதந்தி ஊரிற்பரவி அதன்படி நடத்திவருகிறதென்று அப்பிராமணசகோதரர்கள் கூடி முழங்கத் தலைப்பட்டனர். மற்றுமொருபக்கம் ஸ்தபதிகள்கூடி நாங்கள்தான் முதலில் அபிஷேகம் செய்வோமென்று அவர்கள் கூட்டம் கூடி ஆரவாரித்தனர். இச்சமயம் ஜில்லா கலெக்டரும் ஜில்லா ஜட்ஜியும் மாற்றப்பட்டனர். இக்கூட்டத்தாரது துண்டுப்பத்திரிகை வீதிதோறும் வீடுவீடாய் நுழையவாரம்பித்தது. ரிஸீவர் என் செய்வார். நியாயாதிபதியினிடம் மனுக்கொடுத்து இக்கும்பாபிஷேகத்தை நிறுத்த உத்திரவு வாங்கிவிடுகிறோமென்றார் சிலர். மற்றும் சிலர் தேவகோட்டை முதலியவிடம் சென்று கும்பாபிஷேகத்தை நிறுத்திவிட்டோமென்று வெள்ளை வீசினர். ஆனால் இதொன்றும் நடக்கவில்லை. கிரமமாய் 11ம் தேதி இரவு 15நாழிகைக்குமேல் 19-நாழிகைக்குள் கடஸ்தாபனமும் 12ம்தேதி காலைமுதல் வேதபாராயணங்களும் அன்று 11மணிக்கு யாகசாலாப் பிரவேசமும் நடைபெற்றது. பாராயணத்திற்கு சுமார் 800பிராமணோத்தமர்கள் சேர்ந்தனர். இது தவிரப் பற்பல விடங்களிலிருந்து அனேக பண்டிதோத்தமர்கள் எழுதித் தருவிக்கப்பட்டனர். 14ம் தேதிமுதல் ஆயிரக்கால் மண்டபத்தில் வ்யாகரணம் தர்க்கம் வேதாந்தம் மீமாம்ஸை சாஸ்திரங்களில் வ்யாக்கியார்த்தங்களும் உபன்யாஸங்களும் நடைபெற்றன. ஓர்புறம் வேதகோஷ்டிகளும் மற்றோர்புறம் புராணகோஷமும் வாத்யகோஷங்களும் கல்யாணமண்டபத்தில் புல்லாங்குழல் ஜலதரங்கம் பாட்டுக்கச்சேரி கதை முதலியவைகளும் புதுமண்டபத்தில் தாஸிகளின்கதை நாட்டியங்களும் ஓர் பக்கத்தில் ஜாலவேடிக்கைகளும் இவ்விதம் பலவ

கைகளிலும் ஜனங்களின் மனதைக்கவரச்செய்யும் காரியங்கள் நடந்தன. முனிஸிபாலிடியார்களால் ஆங்காங்குதண்ணீர்ப்பந்தல்களும் அவசியமாய் ஒதுங்கும் மறைவுகளும் ஒவ்வொரு வீதிகளையும் சுத்தம்செய்ய ஏராளமான தோட்டிகளும் நியமிக்கப்பட்டன. கும்பாபிஷேக மகோத்ஸவ ஸேவைக்காகப்பற்பல ஊர்களினின்றும் திரள் திரளாய் வந்து கூடும் ஜனங்களின் ஸௌகர்யத்தை உத்தேசித்து ரயிலும் ஏராளமாய் விடப்பட்டது. 16ம் தேதியன்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஆசார்யஸ்வாமிகளால் ஸ்ரீ கும்பாபிஷேகத்திற்கென்றனுப்பப்பட்ட பீதாம்பரம் பரிவட்டம் முதலியவை யானையின் மேல் வைத்து ஸ்ரீமடம் பண்டிதர்களான வெங்கடராமசாஸ்திரிகள் பஞ்சாபகேச சாஸ்திரிகளாலும் மற்றும் கனவான்களாலும் சூழப்பட்டு சித்திரைவீதி சுற்றி கோவில் மரியாதையுடன் அழைக்கப்பட்டது.

அபிஷேக தினமாகிய 17ம்தேதியன்று அதிகாலையிலேயே ஏராளமான போலீஸ் ஸேவகர்களால் நான்கு கோபுரவாயில்களும் காக்கப்பட்டு டிக்கெட்டுப்பெற்றவர்களெல்லாம் அம்மன் ஸன்னிதி வழியாய் உட்செலுத்தப் பட்டனர். காலை முதல் கோவில் மாடிகளில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் ஏறிவிட்டனர் பட்டணத்திலுள்ள உயர்ந்தவீட்டு மேடைகளில் ஏறிய ஜனங்கள் கணக்கிலடங்காது. இதுதவிர சிததிரைவீதி நான்குகளிலும் ஏற்பட்ட ஜனநெருக்கம் சொல்லுக்கடங்காது. இவ்வாறு சரியான முகூர்த்தநேரமான ஸிம்மலக்னத்தின் நடுவில் அதாவது சுமார் 11மணி அளவில் திவ்யஸ்வர்ணவிமானங்களில் அர்ச்சகர்கள் ஏறி திவ்ய மந்திரங்களும் வாத்தியங்களும் முழங்க திவ்யாபிஷேகத்தைப் பார்க்க ஆவலுடன் இமை கொட்டாமல் அவ்விமானத்தையே தரிசித்து நிற்கும் கோடிக்கணக்கான பக்தர்களின் மனம் குளிர ஸமஸ்த ஜனங்களின் மகாபாதகங்களும் தொலைய அபிஷேக மகோத்ஸவத்தை நடாத்தி கற்பூர ஹாரத்தியும் செய்தார்கள். அச்சமயம் மீனாம்பிகே சுந்தரேசஹாலாஸ்யபதே திவ்யமங்களரூபாவென்று ஆரவாரித்தஜனங்களின் சப்

தம் பட்டணம் முழுவதும் முழங்கியதில் வீட்டினுள்ளிருந்து அச்சத்தத்தினுல் வெளியேறமுடியாதவர்களும் பிறவிக்குருடர்களும் இதுதான் அபிஷேகசமயமென்று கண்டறிந்து தாங்களும் மகிழவாரம்பித்தனர். அச்சமயம் அச்சத்தம் தேவலோகத்திலுள்ளவர்களையும் தட்டி எழுப்பியிருக்குமென்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். இவ்விதம் இம்மகாவைபவம் இடையூறின்றி நடக்கப்போகிறதென்று யாவரும் எதிர்பாக்கவில்லை. மலைபோல் நின்ற இடையூறுகள் மீனுக்ஷியின் மகிமையைக்கண்டதும் பனித்திவலைபோல் விலகிவிட்டன. பிறகு சாயங்காலம் ஸந்தியாவந்தனக் கிரியை முடிந்ததும் கல்யாணமண்டபத்தில் பாராயணத்திற்கென்று பதிவுபெற்ற பெரியோர்களையும் பண்டிதர்களையும் கூட்டுவித்து முதலில் வேதம் கற்றவர்களும் ஆஹிதாக்னிகளுமான பெரியோர்களுக்கு மரியாதையாய்த் தாம்பூலத்துடன் ஸம்பாவனை செய்துவிட்டுப்பிறகு பண்டிதர்களின் எண்ணிக்கை குறைவாய் இருப்பதை உத்தேசித்து அவர்களுக்குப் பரிசளித்தனர். அதில் 1-வது வகுப்புக்கு ரூபாய் 35. பிறகு 25. மூன்ருவது 15. என்று பிரித்து யோக்யதானுஸாரம் அவர்களின் ஸம்பாவனைகளையும் ரயில் செலவையும் அளித்தபின்னர் இரவு நேரமானபடியால் மற்றவர்களுக்கு மறுநாளென்று திட்டம் செய்தனர். அன்றிரவு பஞ்சமூர்த்திகள் விருஷபவாகனத்தில் அலங்கரித்து மாசிவீதியில் எழுந்தருளிய விமரிசையை இந்திராதிதேவர்களும் இதற்குமுன் பார்த்திருக்கமாட்டார்களெனலாம். ஏராளமான காஸ்லைட்டுகள் வாத்தியகோஷ்டிகள் பல. அன்று வேதபாராயணம் செய்துவந்த பிராமணோத்தமர்களுக்கு ஓர் செட்டியார் 400 ரூபாய் தக்ஷிணையளித்தார். வாணவேடிக்கைகள் ஆகாயத்தில் சிறிச்சீறிக்கிளம்பியதைப் பார்த்தால் தேவலோகம்மேலென்ற எண்ணம் வேண்டாம். உங்களுக்கு இவ்வானந்தம் கிடைக்காதென்று வேகமாய் அதட்டக்கிளம்பியது போல் தோன்றிற்று. பூமிதேவியும் ஸ்வர்க்கலோகத்தின் அதிஷ்டான தேவியின் எதிரில் இப்போது நான் பரமபாக்கியம் பெற்றேனென்று குதூகலித்து விளையாடுபவள்போல் அம்மானை வாணங்கள் சிவப்

புபச்சை குண்டுகளை ஆகாயத்தில் கிளப்பியது. இவ்விதம் ஸ்ரீ மீனும்பிகை சுந்தரேசருடன் பவனிவந்து கோவிலில் வந்து சேரும்போது காலை 5மணிக்குமேல் ஆய்விட்டது. இவ்விதம் ஈசனருளால் நிர்விக்னமாய் முடிந்த இம்மகோத்ஸவத்தைக் கண்டும் பொறுமையும் அஸூயையும் சிலர் அடைந்தனரென்றல் அவர்களை நாம் என்னென்று சொல்வோம். மறுநாள் காலையில் வேதப்பிராம்மணர்களுக்கு ஸன்மானம் செய்யவாரம்பித்து நடத்தியதில் ஒவ்வொருவரும் தனக்கு இவ்வளவுகிடைத்தால் போதுமென்று எண்ணியிருந்த அளவுக்கு மேலாகவே ஸ்வர்ணவர்ஷமாய் ஏற்பட்டுவிட்டது. இவ்விதம் கொடுக்க வேண்டுமெண்டுமென்று செட்டியாரிடம் சொல்லி ஏற்பாடு செய்தவர்களும் இக்கோயிலுக்குத்தோன்றிய அனேக இடுக்கண்களைப் பாடுபட்டு விலக்கியவர்களும் இக்கும்பாபிஷேகத்தை இவ்விதம் நடத்தவேண்டுமென்று திட்டம் செய்தவர்களும் ஸ்ரீமான் K. R. வெங்கடராமய்யரவர்களுக்கும் அவர்களுடன் சேர்ந்து கைங்கர்யம் செய்தவர்களுக்கும் ஷ தேவஸ்தானம் ரிஸீவர் அழகப்பசெட்டியார் அவர்களுக்கும் விசேஷமான ஐசுவரியத்தையும் ஆயுளையும் புத்திரபௌத்திர ஸந்ததியையும் விசேஷ ஆஸ்திக்கிய புத்தியையும் ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரேசுவரர் தந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கிறேம்.   சுபம்.

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

ஸ்ரீ மடம் கல்வி அபிவிருத்தி.

மஹாவைதீக குலத்தில் பிறந்த ஆங்கிலம் கற்ற சிலரின் மாறுபாட்டை மட்டும் கவனிப் போமானல் இவர்கள் தாங்கள் அறிந்தும் அநுஷ்டிக்க முடியவில்லையே என்று தவிக்கிறர்கள். வேதாத்யயனம் கொஞ்சம் செய்திருந்தாலும் ஸம்ஸ்கிருதம்கற்றிருந்தாலும் யாது பயன்? தர்மசாஸ்திரங்களை நன்கு அறிந்து

தான் யாது பயன். மேல்நாட்டு ப்ரத்தியக்ஷ அநுபவ சாஸ்திரிகள் ரூபித்துக் காட்டி வெளிப் படுத்தியதை நன்ருய்க் கேட்டிருந்தாலும தான் என்ன பயன்? தினமும் ஸ்னனம் செய்வது எவரும் தவறுவதில்லே. ஆனல் பொழுது விடியுமுன் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்ய வேண்டும் என்ற பிடிவாதத்தைக் காப்பாற்ற முடியவில்லேயே. அந்தப் பழக்கம் வழக்கமாக மாட்டேன் என்கிறதே. தினம் ஸந்தியாவந்தனம் செய்வதிற்குறைவில்லே. காலத்தில் செய்வதற்கு சிரத்தை ஏற்படவில்லேயே. மந்திரத்தை இந்த நாக்கு சரியாய் உச்சரிக்கிறதில்லேயே. உலகப் பொருளில் ஏற்பட்டுள்ள கவனம் மந்திரார்த்தத்தில் இருப்பதில்லேயே. ஹிருதயத்தில் பகவத்யானம் செய்யவேண்டும் என்று நிச்சயம் செய்தாலும் மனம் நிற்பதில்லேயே. உலகப் பொருள் சாச்வதமில்லேயென்று நன்ருய் அறிந்திருந்தும் அவைகளேயே தியானித்துக் கொண்டிருக்கிறதே. நம்முடைய பொருள்களனைத்தும் உடலுக்காகவே என்றும் உடலேப் போஷிப்பது ஆத்மாவின் கார்யமாகா என்றும் நினேத்தாலும் மனம் சலித்து சலித்து மீண்டும் பொருளினிடையே ம்னம் பற்றுகிறதே. இவைகளெல்லாம்விட மிகமுக்யமான தொன்று உண்டு.

வைதிக கார்யங்களெல்லாம் விட்டோம். தினம் அக்னிகார்யமும் பஞ்சயக்ஞங்களேயும் பகவதாராதனேயையும்விட்டதனுல் தர்மபத்தினிகள் தங்களுடைய வீட்டுக்காரியங்களேயும் சமையல்கார்யத்தையும் சரீரபோஷணத்துக்குஎன்றும்அதற்காகவே எல்லாக்கார்யமும் சுகத்தை அடையவே என்றும் எண்ணிவிட்டார்கள். ஆதலால் அந்த ஸ்திரீகள் பகலில் தீனி தின்பதும் புருஷபோகமனுபவிப்பதும் தர்மம் என்றே வாஸ்தவமாய் எண்ணநேர்ந்து விட்டது. ஆகையால் பிரஜோத்பத்தி என்ற தர்மம் மறைந்து காமானுபவம் என்ற அதர்மம் வெளிக்காட்டுகிறது. காமத்தினுல் உண்டான குழந்தைகள் தன் ஆயுட்காலம் தனக்கு நிச்சயமில்லாமல் தினம யமனே எதிர்பார்த்துக்

கொண்டே வைத்தியர்கள்கையில் உடலை ஒப்புவித்துவிட்டு உலகில் நடமாடுகின்றன. தர்மம் அதர்மத்தால் ஜயிக்கப்படும் என்ற பராசரர்வாக்கு இக்கலி ஆரம்பத்திலேயே முழுவதும் பலித்து விட்டது. இஃதெல்லாம் பால்யத்தில் சரீரக்கட்டும் மனக்கட்டும் ஏற்படாததால் தான்.

பிரும்மசாரியாலயங்கள்,

ஒவ்வொரு கிருமத்திலும் ஒரு பிரும்மசர்யாச்ரமம் ஏற்படுத்தலாம். அங்கங்கே 2, 3 பிரும்மசாரிகள் கிடைத்தாலும் ஒரு குருவிடம் ஒப்பிவிக்கவேண்டும். இந்தப் பையன்கள் தினம் நியதமானகார்யங்கள் செய்யவேண்டும். ஒவ்வொரு நகரத்திலும் ஆச்ரமம் ஸ்தாபித்து கிடைத்த பிள்ளைகளைக் கொண்டு ஆரம்பிக்கவேண்டும்.

பிரும்மசாரியின் தினக்காரியம்.

விடிய 5நாழிகையளவில் எழுந்திருந்து பகவத்தியானங்களை சொல்லிக் கொண்டு ஆறு குளங்களுக்குச் சென்று சுத்திசெய்து பல்துலக்கி ஸ்னானம் செய்யவேண்டும். ஸந்தி செய்தபின் ஸமிதாதானம் செய்யவேண்டும். அத்யயனம் செய்க. இவர்களுக்குஎல்லாக்காரியங்களையும் செய்யவேண்டிய விதிகளைக்கற்பிக்க வேண்டும். பிள்ளைகள் அறியாத கார்யங்களில் ஆசார்யனைக் கேட்டு நடக்கவேண்டும். தினம் மத்தியான்னத்திலும் ஸாயான்னத்திலும் பக்கத்து அக்ரஹாரங்களில் பிக்ஷை எடுத்து வந்து சாப்பிடவேண்டும். காலத்தில் கர்மாக்களைச் செய்யவேண்டும். யக்ஞோபவீதம், மிஞ்சிப் புல்தண்டு முதலிய அடையாளங்களைத் தரிக்கவேண்டும்.

(இன்னும் வரும்).

ஸாரம் இரங்காச்சார்யன்